**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI**

**<u>IA No. 3/2023 P.O.P. No.13/2021</u>**

**PW.1** is solemnly affirmed on **04.03.2023** in accordance with the provisions of the Act of 1873.

| Name | அபினேஷ் | Father / Husband Name | |
|---|---|---|---|
| Village | | Taluk | |
| Caste | | Calling | |
| Religion | | Age | |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் 1ஆம் மனுதாரர் ஆவேன். என் தாயார் பெயர் சித்ரா ஆகும். 1ஆம் எதிர்மனுதாரர் மாதேஷன் என் தந்தையார் ஆவார். 2ஆம் எதிர்மனுதாரர் தெய்வானை என் பாட்டி ஆவார். 3ஆம் எதிர்மனுதாரர் என் அத்தை ஆவார். 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் நிலத்தை வாங்கியவர்கள் ஆவார்கள். என் தாயார் என்னையும், என் சகோதரி கண்மணியையும் சார்பாற்றி பாகபிரிவினை மற்றும் இதர கோரிக்கைகளை தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்குரைக்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த போதிய வசதி இல்லை என்பதால், வரியவர் வழக்காக வழக்குரையை கோப்பில் இட வேண்டி மனு செய்துள்ளார். எனது பிறந்த தேதி 26.03.2004 ஆகும். நான் Diploma in Mechanical Engineering படித்துள்ளேன். ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். என் தாயார் இன்று என்னோடு நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். எனவே, என்னை உரிமை வயதை அடைந்தவர் என்று விளம்புகை செய்ய வேண்டுகிறேன். என் தந்தையாரும், என் தாயாரும் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். நானும், என் தாயாரும் கிருஷ்ணகிரி காவேரிப்பட்டிணம்,

புளியாண்டியூரில் வசித்து வருகிறோம். என் தந்தையாருக்கு முறையற்ற உறவில் வாழ்ந்து வருவதால், என் தாயாரும், என் தந்தையாரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள்.

என் அக்கா கண்மணி என்னை விட வயதில் 1 வயது மூத்தவர் ஆவார். கண்மணி Diploma in Computer Science முடித்துவிட்டு, சென்னையில் தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். கடந்த 2 வருட காலமாக எனது அப்பாவின் பராமரிப்பில் எனது அக்கா இருந்து வருகிறார். எனவே, மனுவை அனுமதிக்க வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

இல்லை.

R SAKTHIVEL

Principal District Judge
Digitally signed by R SAKTHIVEL
Location: Krishnagiri

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI**

**<u>IA No. 2/2023 P.O.P. No.13/2021</u>**

**PW.1** is solemnly affirmed on **04.03.2023** in accordance with the provisions of the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | சித்ரா | Father / Husband Name | |
| Village | | Taluk | |
| Caste | | Calling | |
| Religion | | Age | |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் 1ஆம் மனுதாரர் ஆவேன். 1ஆம் எதிர்மனுதாரர் என் கணவர் ஆவார். எனக்கும், 1ஆம் எதிர்மனுதாரருக்குமான திருமண உறவில் கண்மணி என்ற மகளும், அபினேஷ் என்ற மகளும் பிறந்தார்கள். 22.03.2003 அன்று என் மகள் பிறந்தார். அதன் பிறகு என் மகன் அபினேஷ் 26.03.2004 அன்று செயின்ட் லூாயிஸ் மருத்துவமனையில் பிறந்தார். எனது மகளும் அதே மருத்துவமனையில்தான் பிறந்தார். எனது மகனும், மகளும் தற்போது உரிமை வயதை அடைந்துவிட்டார்கள். எனது மகனும், மகளும் இளவர்களாக இருந்தபோது நான் முதன்மை மனுவை தாக்கல் செய்திருந்தேன். அவ்வழக்குரைக்கு ரூ.20,030/- நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. அவ்வளவு தொகை கட்டுவதற்கு எனது மகனுக்கும், மகளுக்கும் வசதி வாய்ப்பு இல்லை. எனது மகன் பெயரிலும், மகள் பெயரிலும் வழக்கு சொத்தில் உள்ள உரிமையை தவிர வேறு சொத்துரிமை எதுவும் இல்லை. தற்போது என் மகன் தனியார் கம்பெனியில் வேலைக்கு சென்று வருகிறார். கடந்த

2 மாத காலமாகத்தான் வேலையில் சேர்ந்துள்ளார். அந்த வேலை நிரந்தரமானதாக இருக்குமா என்று எனக்கு தெரியவில்லை.

என் மகள் கண்மணி மகனை விட ஒரு வருடம் மூத்தவர் ஆவார். அவர் சென்னையில் வேலை செய்து வருவதாக தெரிய வருகிறது. அவர் எனது கணவரின் பராமரிப்பில் வளர்ந்து வருகிறார். 2019ஆம் வருடத்தில் என் மகள் திருவண்ணாமலை பாலிடெக்னிக்கல் கல்லூரியில் படித்து வந்தார். அப்படியே என் கணவர் அவரை அழைத்து சென்று விட்டார். என் கணவருக்கு வேறு ஒரு பெண்ணுடன் முறையற்ற உறவு உள்ளது. ஆதலால், 2019ஆம் வருடத்தில் இருந்து நானும், எனது கணவரும் பிரிந்து வாழ்கிறோம். தற்போது என் கணவர் திருவண்ணாமலையில் வசித்து வருவதாக அறிகிறேன். ஆனால், உண்மையில் எங்கு வசித்து வருகிறார் என தெரியாது.

நானும், என் மகனும் காவேரிப்பட்டிணம் அருகில் உள்ள புளியாண்டியூர் கிராமத்தில் வசித்து வருகிறார். எனவே, எனது மகனும், மகளும் உரிமை வயதை அடைந்துவிட்டதால், அவர்களை உரிமை வயதை அடைந்தவர் என விளம்புகை செய்தும், என்னை காப்பாளர் பொறுப்பில் இருந்து விடுவித்தும் உத்திரவிட வேண்டுகிறேன். இன்று என் மகன் அபினேஷ் என்னோடு நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

இல்லை.

R SAKTHIVEL

Principal District Judge
Digitally signed by R SAKTHIVEL
Location: Krishnagiri